**+2 வணிகவியல் மதுரை மாவட்டம் TAT 2020**
**சரியான விடை**

1. (அ) மேலாண்மை
2. (அ)**A** மற்றும் **R** சரியானது ஆனால்**R A** ஐ விளக்கவில்லை

3. (இ) சிறந்த பணியாளர்களின் பணியைப பாராட்டி மேலூதியம் ஊக்கத் தொகை வழங்குவதில்லை

4. (இ)ரிச்சர்டு புஸ்கிரிக் மற்றும் ஜேம்ஸ்
5. (இ) கப்பல் இரசீது
6. (ஆ)திறன் சோதனை – அறிவுத்திறன்
7. (அ) ஸ்டாண்ட் அப் இந்தியா
8. (இ) இந்திய தர நிறுவனச் சட்டம் - 1942
9. அ) லத்தீன்
10.(இ)இரண்டாம் நிலைச் சந்தையில் ஒரு முறை மட்டும் பத்திரங்கள் விற்கப்படுகின்றன

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X2=10**

11.**செயலூக்கமளித்தல**: செயல் ஊக்கம் அளித்ததல் மூலமே நிறுவனத்தின் நோக்கங்களை அடைய முடியும்.
ஒரு பணியை விரைவாக செய்து முடிப்பதையும் பணியாளர்களை பணியில் மீதான விருப்பத்தை வளர்ப்பதையும் செயல் ஊக்கம் அளித்தல் என்று கூறுகிறோம்

**12.தீர்மானம்:** இயக்குனர் அவையால் எடுக்கப்பட்ட ஒரு முடிவை நடைமுறைப்படுத்த சட்டப்படி குறைந்தளவு எண்ணிக்கை கொண்ட கூட்டத்தில் ஓட்டுப்பதிவு நடத்தியோ அல்லது வேறு முறையின் மூலமாகவோ பங்குதாரர்களால் அளிக்கப்படும் ஒப்புதல் தீர்மானம் எனப்படும்.

| 13. **மொத்தவிற்பனை சந்தை** | **சில்லறை விற்பனை சந்தை** |
|---|---|
| உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக பொருட்கள் கொள்முதல் செய்யப்படுகிறது | மொத்த விற்பனையாளர் களிடமிருந்து நேரடியாக பொருட்கள் கொள்முதல் செய்யப்படுகிறது |
| மொத்தமாக பொருட்கள் கொள்முதல் செய்யப்படுகிறது | சிறு, சிறு அளவில் பொருட்கள் கொள்முதல் செய்யப்படுகிறது |
| சில்லறை விற்பனையாளருக்கு மொத்தமாக விற்பனை செய்யப்படுகின்றது | நுகர்வோர் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு சிறு, சிறு அளவில் விற்பனை செய்யப்படுகின்றது |
| நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுவது இல்லை | நுகர்வோருக்கு தேவையான அளவில் விற்பனை செய்யப்படுகிறது |

**14. “வாங்குவோர் ஜாக்கிரதை”** பொருட்களை வாங்கியவர் அப்பொருள் அவரது எதிர்பார்ப்புகளை ஈடு செய்யவில்லை எனில் அல்லது குறைபாடு உடையதாக இருப்பின் அதற்கு விற்றவர் பொறுப்பேற்க மாட்டார்
வாங்குபவரின் பொறுப்பு என்ற எச்சரிக்கை செய்யும் தத்துவம் வாங்குவோர் ஜாக்கிரதை அல்லது வாங்குவோர் விழித்திரு எனும் கோட்பாடு ஆகும்

**15. VUCA-**
1. ஏற்ற இறக்கம்
2. நிச்சயமற்ற தன்மை
3.சிக்கலான தன்மை
4.தெளிவற்ற தன்மை போன்ற வணிகத்தின் எதிர்கால சூழலை சுருக்கமாகக் கூறுவது

**16.அகத்தொழில் முனைவோர் இலக்கணம்** ஒரு தொழில்முனைவோர் ஆரம்பித்த பணியில் பணிபுரிபவர் இவர் தனக்கு வழங்கப்பட்ட பணியில் நிறுவனத்தில் கிடைக்கக்கூடிய வளங்களை கொண்டு தனது ஆற்றலை பயன்படுத்தி புதிய எண்ணங்களை புகுத்துபவர்

**17. “செயல்படுவதற்கு முன் சிந்தியுங்கள்” இந்தக் கூற்று**நிதித் திட்டமிடுதல் என்ற மேலாண்மை செயல்பாடுடன் தொடர்புடையது
திட்டமிடுதல் இல்லாமல் எந்த ஒரு காரியமும் செய்ய முடியாது

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X3=15**
**18. கலைமான்** இவ்வகை ஊக வணிகர் முன்னெச்சரிக்கை உடையவர்
ஒரு நிறுமத்தின் பங்குகள் முனைமத்தில் விற்கப்படும் என்று அதைப் பெற்றுக்கொண்டு விற்கக்கூடிய ஊக வணிகரே கலைமான் ஆவார் இவரே முனைம வேட்டையாளர் என்றும் அழைக்கப்படுகிறார்
**முடவாத்து** தம் நடவடிக்கையில் உள்ள இடர்பாடுகளை தீர்ப்பதில் போராடிக் கொண்டிருக்கின்ற கரடி ஊக வணிகரே முடவாத்து என்று அழைக்கப்படுகிறார்
பின்னர் கொடுப்பதற்காக தற்போது பத்திரங்களை விற்பார்
பங்குகளை இவரிடமிருந்து வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்தவரும் தீர்வை தள்ளிவைக்க விரும்பாததால் இவ்வகை வணிகர் போராட வேண்டியதாயிற்று.

**19. ஆட்சேர்ப்பு வரையறு.:**
**பெர்க்மேன் மற்றும் டெய்லர்** அவர்களின் கண்ணோட்டத்தில் “ஆட்சேர்ப்பு என்பது தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் இருக்கும் இடத்தை அறிவது, அடையாளம் காண்பது மற்றும்ஈர்க்கும் செயல்முறை ஆகும்.”
**எட்வின் பி பிலிப்போ** அவர்களின் கூற்றுப்படி,“ நிறுவன காலியிடங்களுக்கு திறன் வாய்ந்த வேலையாட்களை தேடி தூண்டுவதும் மற்றும் அவர்களை நிறுவனங்களில் வேலைக்கு விண்ணப்பிக்க ஊக்குவிப்பதும் ஆட்சேர்ப்பு செயல்முறை எனப்படுகிறது.”

**20.B2B** உற்பத்தியாளருக்கும் மொத்த வியாபாரிகளுக்கும் இடையேயான, மொத்த வியாபாரிகளும் சில்லரை வியாபாரிகளுக்கும் இடையேயான வாங்குதல் மற்றும் விற்றல் வியாபாரங்கள் **B2B** எனப்படும்

**B2C** உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் இடையேயான வணிக நடவடிக்கைகள் **B2C** எனப்படும்.

**21. செயற்கைப் பற்றாக்குறை:** வணிகர்கள் தங்களிடம் அதிகளவு பொருட்கள் இருப்பு இருப்பினும் இல்லை எனக்கூறி செயற்கையான தேவையை உருவாக்குவது செயற்க்கை பற்றாக்குறை எனப்படும்.

இதன் மூலம் நுகர்வோர்கள் தங்களின் தவிர்க்க இயலாத காரணத்தால் அதிக விலை கொடுத்து பொருட்களை வாங்குவதால் விற்பனையாளர்கள் அதிக லாபம் அடைகின்றனர்

**22. தற்போதைய சரக்கு:** 1.ஒப்பந்தம் செய்யும் பொழுது விற்பனையாளரிடம் உள்ள சரக்கு
2.விற்பனை செய்ய முகவரிடம் ஒப்படைக்கப்பட்ட சரக்கு அல்லது
3.அடமானம் பெற்றவர் விற்கும் அடமான சொத்தும் இருக்கின்ற அல்லது தற்போதைய சரக்கு எனப்படும்

4.மேலும் இருக்கின்ற சரக்கை i)ஒப்பிய சரக்கு ii)உறுதிசெய்யப்பட்ட சரக்கு Iii)உறிதியிடா சரக்கு என வகைப்படுத்தலாம்.

| 23. மாற்றுமுறைத் தன்மை | உரிமைமாற்றம் |
|---|---|
| உரிமையை மேலெழுதி தருவதன் மூலமாகவோ அல்லது கொணர்பவர் மாற்றுச்சீட்டை வேறுவகையில் ஒப்படைதன் மூலமாகவோ உரிமை மாற்றம் செய்யமுடியும | உரிமை மாற்றும் சட்டத்தின் கீழ், வரையறுக்கப்பட்ட சடங்கு முறைப்படி உரிமையை மாற்ற வேண்டும் |
| மாற்றுமுறை ஆவணத்தைக் கொண்ட நபர்,கடனாளியிடமிருந்து பணத்தை செலுத்தி கேட்க தேவையில்லை | உரிமை மாற்றம் பெற்றவர், கடனாளியிடமிருந்து தன்னிடம் கடன் தொகையை செலுத்த அறிவிக்க வேண்டும் |
| உரிமை மாற்றத்தை மறுபயன் கொடுத்து நன்நம்பிக்கையுடன் ஆவணம் ஒன்றை பெறுபவரின் உரிமை, அதனை தன்னிடம் மாற்றி கொடுத்த நபரின் உரிமையை விட சிறந்த உரிமையாக கருதப்படுகிறது | உரிமை மாற்றத்தை பொறுத்தவரை மாற்றுபவருக்கு எவ்வளவு உரிமை உள்ளதோ அதே அளவு உரிமை மாற்றப் பெறுபவருக்கும் மாறும் |
| இதில் மறுபயன் இருப்பதாகக் கொள்ளப்படுகிறது | உரிமை மாற்றம் பெற்றவர், மறுபயனை மெய்ப்பிக்கவேண்டும் |

**24.** காசோலையின் மூலையில் இரு கோடுகள் இடவேண்டும்
அந்த கோட்டினுள்“அண்ட் கம்பெனி” அல்லது “மாற்று தன்மையற்றது” என்ற சொற்கள் இருக்க வேண்டும்
இதன் மூலம் பணத்தை மாற்றிக் கொடுக்கலாம்.

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி 3X5=15**

**25.அ) விதிவிலக்கு மேலாண்மையின் நன்மைகள்**
1) இது மேலாளர்களின் நேரத்தை சேமிக்கிறது.
2) இது முக்கிய பிரச்சினைகளை நிர்வகிப்பதில் கவனங்களைச் செலுத்துகிறது.
3) இது அதிகாரப் பகிர்வினை எளிமையாக்குகிறது.
4) இது முக்கியமல்லாத தகவலில் இருந்து, முக்கியமான தகவலைப் பிரிக்கும் ஒரு தொழில் நுட்பமாகும்.
5) முக்கியமான சிக்கல்களைக் கண்டறிவதன் மூலம், வாய்ப்புகளையும் அச்சுறுத்தல்களையும் மேலாண்மை எச்சரிக்கையாக வைத்திருக்க இது உதவுகிறது.
6) விதிவிலக்கு மேலாண்மை முடிவுகளை நிர்ணயிக்கும் சிறந்த அளவுகோலாக விளங்குகிறது. இது குறிக்கோள் செயல்திறன் மதிப்பீட்டில் பயனுள்ளதாக உள்ளது.

**25.ஆ. இயக்குனர்களின் தகுதியின்மைகளை பட்டியலிடு.** கம்பெனி சட்டத்தின்164 ஆம் பிரிவின் படி, கம்பெனியின் இயக்குனராக தகுதியற்றவர்கள் பின்வருமாறு: -

1. பித்தநிலை பிடித்தவர் என தகுதி வாய்ந்த அதிகார நீதிமன்ற கண்டுபிடிப்பு மற்றும் அமலில் உள்ள போது
2. திவாலானவர் என நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டவர்
3. திவாலானவர் என அறிவிக்கக் கோரி நீதிமன்றத்தில் விண்ணப்பித்துள்ள, அவரது விண்ணப்பம் நிலுவையில் உள்ளது போது
4. நீதிமன்றத்தில் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு, ஆறு மாத காலத்திற்கு குறையாமல் சிறைதண்டனை பெற்று இருப்பவர்கள் (எனினும் தண்டனைகாலம் முடிந்து 5 ஆண்டுகள் கழித்து பிறகு அவரை இயக்குனராக நியமித்ததை சட்டம் ஏற்றுக் கொள்கிறது)
5. அழைப்பு பணம் செலுத்தாமல் இருப்பவர்கள்
6. நீதிமன்றம் அல்லது திருப்பாயத்தால் தகுதியற்றவர்கள் என தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டவர்கள்
7. கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏதேனும் சமயம் பிரிவு 188 இன் கீழ் தொடர்புடைய நபருடன் நடவடிக்கைகளில் ஈடுபடும் போது, குற்றம் புரிந்தவர் என தீர்ப்பளிக்கப் பட்டவர்கள்
8. இயக்குனர் அடையாள எண்ணைப் பெறாதவர்கள்

நிதி அறிக்கைகள் அல்லது ஆண்டு அறிக்கைகளை தாக்கல் செய்யாததன் பின்விளைவு தொடர்பாக பிரிவு 164 (2) ஒரு கூடுதல் தகுதியின்மையை தந்துள்ளது.

1) கம்பெனி ஒன்றின் இயக்குனராக உள்ள ஏதேனும் ஒரு நபர், தொடர்ந்து 1999 ஆம் ஆண்டின் மூன்று நிதி ஆண்டுகளுக்கு நிதி அறிக்கையையும்,ஆண்டு அறிக்கையையும் தாக்கல் செய்ய தவறும் நிலையில் அல்லது,

2) கடன்பத்திரம் வைப்புகள் அல்லது அதன் மீதான வட்டி போன்றவற்றை தவணை நாட்களுக்குள் செலுத்ததவறினால் அல்லது கடன் பணத்தை தவணை தேதிக்கு முன்னர் திரும்ப செலுத்த தவறும் பட்சத்தில் அல்லது தொடர்ந்து ஓராண்டுகளாக அல்லது அதற்கு மேலாக பங்காதாயம் செலுத்த தவறும் நிலையில், கடன்பத்திரம்/ வைப்பு/ பங்கு ஆதாயம் போன்றவற்றை தரத்தவறும் நிலையில், பொது கம்பெனியின் இயக்குனராக நியமனம் செய்ய மற்றும் அதே கம்பெனியில் மறு நியமனம் செய்ய அவர் ஐந்து ஆண்டு காலத்திற்கு தகுதியற்றவராகிறார்.

**26.அ) விருப்பச் சந்தை**ஒரு விருப்பப் சந்தை என்பது ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் ஒரு குறிப்பிட்ட விலையில் வாங்க அல்லது விற்பனை செய்யக்கூடிய ஒரு வகை பாதுகாப்பு ஆகும்

ஒரு விருப்பங்கள் ஒப்பந்தம் செய்பவர் குறிப்பிட்ட விலையில் அல்லது குறிப்பிட்ட தேதியில் வாங்குவதற்கு உரிமை அளிக்கிறது

**சென்செக்ஸ்**என்பது மும்பை பங்குச்சந்தை அமைப்பின் பங்கு குறியீடாகும்

சென்செக்ஸ் குறியீட்டில் கணக்கிட 30 பங்குகளை பட்டியலிடுகின்றன

சென்செக்ஸ் கணக்கிடுவதற்கு பட்டியலிடப்பட்ட பங்குகளில் அளவுகோல்கள் BSE இன் மொத்த பங்குகளின் அளவையும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது

மேற்கூறிய காரணிகளை அடிப்படையாக கொண்டு மும்பை பங்குச்சந்தை 30 பங்குகள் கொண்ட ஒரு கட்டமைப்பைக் கொண்ட முறையாக கணக்கிடப்படுவதே சென்செக்ஸ் என அழைக்கப்படுகிறது.

| **26.ஆ) நகர்ப்புற தொழில் முனைவோர்** | **ஊரக தொழில் முனைவோர்** |
|---|---|
| மாநிலத் தலைநகரம் மாவட்ட தலைநகரம் பேரூராட்சிகளில் தொழிலை துவங்குவார் | கிராமப்புறங்களில் தனது தொழிலை துவங்குவார் |
| ஊரக தொழில் முனைவோரை காட்டிலும் குறைவான அரசு சலுகை பெறுகிறார் | கிராமப்புற வளர்ச்சிக்காக அரசு அதிகமான சலுகைகளை இவருக்கு வழங்குகிறது |
| உற்பத்தி சில்லறை அல்லது கூட்டுப் பங்கு தொழில்முனைவோராக இருக்கலாம் | உற்பத்தி மற்றும் சில்லறை தொழில்முனைவோராக இருக்கலாம் |
| நகர்புறங்களில் செயல்படுவதால் அதிகமான உற்பத்தி செலவு ஏற்படுகிறது | கிராமப்புறங்களில் செயல்படுவதால் குறைவானஉற்பத்தி செலவு ஏற்படுகிறது |
| உற்பத்தி செலவு அதிகமாதலால் பொருளுக்கான விலையை அதிகரித்து விற்பனை செய்கிறார் | உற்பத்தி செலவு குறைவாக உள்ளதால் நுகர்வோருக்கு குறைவான விலையில் பொருட்களை விற்பனை செய்கிறார் |

**27.அ) சீன மருத்துவமனையை பொறுத்தவரை இது எதிர்காலச் சரக்கு** ஆகும்.

ஒப்பந்தம் செய்யும் போது தன் கைவசம் இல்லாத ஆனால் எதிர்காலத்தில் உற்பத்தி செய்தோ அல்லது பிறரிடம் இருந்து ஒப்பந்தத்திற்குப் பிறகு வாங்கியோ தரப்படும் சரக்கு எதிர்கால சரக்கு

எதிர்கால சரக்கு அறுதியிடப்படாத சரக்கு ஆகும்.

**27.ஆ) ஜன் தன் ஆதார் மொபைல் திட்டம்** ஆகும்.

இத்திட்டத்தின் மூலம் பல அரசுத் திட்டங்களில் பயன் பெற்று வரும் பயனாளிகளுக்கு சேரவேண்டிய மானியத்தை சம்பந்தப்பட்ட துறை நேராக அவர்களுக்கு வழங்கும் நோக்கத்தில் பயனாளிகளை கட்டாயமாக வங்கிகளில் கணக்கு ஆரம்பிக்க கட்டாயப்படுத்தப்பட்டு அனைவர் பெயரிலும் வங்கிக்கணக்கு ஆரம்பிக்கப்பட்டு வருகிறது

இதனால் பயனாளிகளுக்கு செல்லவேண்டிய மானியத்தை சுரண்டி வந்த இடைத்தரகர்கள் அறவே அகற்றப்பட்டனர்

இத்திட்டத்தின் மூலம் பயனாளிகளின் மானியத் தொகையை பயன்படுத்தி தங்களின் வாழ்வை வளப்படுத்திக் கொள்ள முடிகிறது.